விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 198 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 21 செவ்வாய்க்கிழமை (05.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## திருக்கேதீச்சர பெருமானுக்கு நாளை மஹா கும்பாபிஷேகம்



### மன்னாருக்கு படையெடுக்கும் அடியவர்கள்

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீச்சர ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை இடம்பெறவுள்ளது. காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரையான உத்தர நட்சத்திரம் சிம்மலக்கின நன்முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

திருக்கேதீச்சரநாதர் ஆலயம் சிற்ப சாஸ்திரத்துக்கு அமைவாக முழுக்க முழுக்க கற்கோயிலாகவும், 15

### ஐஓசி - யாழ். மேலதிக அரச அதிபர் உடன்பாடு

## யாழில் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழில் ஐஓசி மூலம் பொதுமக்களுக்கு 72 சதவீதமும் அரச உத்தியோகத்தர்களுக்கு 28 சதவீதமும் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள 15



### பிரதமர் ரணில் வீட்டை

# முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள்

## தென்னிலங்கையில் பதற்றம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ வீட்டை சுற்றிவளைத்து நேற்று ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டம் நடத்தினர். இதனால் தென்னிலங்கையில் நேற்று பதற்றமான நிலை ஏற்பட்டிருந்தது. மேலும் பொலிஸார் மற்றும் இராணுவம் ரணில் வீட்டை சுற்றி குவிக்கப்பட்டிருந்தனர். ( 15ஆம் பக்கம் பார்க்க)



### யாழ். பொன்னாலையில்

## தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்த குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொன்னாலைப் பகுதியில் தண்ணீர் வாளிக்குள் தவறி விழுந்த குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் பொன்னாலை சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த யசோதரன் யஸ்மிகா (வயது 1வருடம் 6 மாதம்) எனும் குழந்தையே உயிரிழந்துள்ளது. 15

## வவு. செட்டிகுளத்தில் ரயில் விபத்து

### இளம் குடும்பஸ்தர் பலி



(வவுனியா )

வவுனியா செட்டிகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற ரயில் விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக மரணமடைந்துள்ளார். நேற்று பிற்பகல் கொழும்பில் இருந்து தலைமன்னார் நோக்கி 15

## இலங்கைக்கு ஆஸி உதவி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கடல்சார் துறைகளின் முன்னேற்றத்திற்கு ஆதரவளிப்பதாக அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலிதெரிவித்துள்ளார். 15


## மக்களுக்கு எரிபொருளை பகிர்ந்தளிக்க இராணுவம் முழுமையான ஒத்துழைப்பு

### யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி

(யாழ்ப்பாணம்)

பொது மக்களுக்கு எரிபொருள் பகிர்ந்தளிப்பதற்கு இராணுவம் முழு ஒத்துழைப்பினை வழங்கும் என யாழ். கட்டளைத் தளபதிமேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர ஜால்மர் தெரிவித்தார்.

யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜயசுந்தர ஜால்மர் யாழ். மறை 15



### காரைநகரில்

## இந்திய மீனவர்கள்

### 5 பேர் நேற்றும் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 15

### எதிர்வரும் 3 வருடங்களுக்கு

## அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் அரச சேவை ஊழியர்களுக்கு எவ்வித சம்பள அதிகரிப்பையும் மேற்கொள்ளக்கூடாது என சர்வதேச நாணய நிதியம் (IMF) அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் விசேட கொடுப்பனவும் அதிகரிக்கப்படக் கூடாதுஎன்றநிபந்தனை 15

## சஜித் - மைத்திரி அவசர சந்திப்பு

### நெருக்கடி நிலை தொடர்பில் ஆராய்வு

(1ஆம் பக்கம் பார்க்க)

### அத்தியாவசியப் பொருட்களை

## நிவாரண விலையில் வழங்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களை நிவாரண விலையில் பொதுமக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்திற்குத் தேவையான அரிசி கையிருப்பு நாட்டில் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனால் நாட்டில் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில்

## சிற்றுண்டிச்சாலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இராணுவ சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக பயணங்களினை மேற்கொள்கின்ற உள்ளூர் மற்றும் வெளியூர் பயணிகளின் மற்றும் அங்கு பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் பயன்பாட்டுக்கும் தேவைப்பாடுகளிற்கும் பயன்படுத்தும் வகையில் விமான நிலையத்தின் சூழலில் இலங்கை இராணுவத்தின் 7ஆவது பெண்கள் படையணியினால் புதிதாக அமைக்கப்பட்ட சிற்றுண்டிச் சாலையானது யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேசுந்தரவின் தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இதன்மூலமாக விமான நிலைய பணியாளர்கள் மற்றும் பயணிகளுக்கு தூய்மையான சுகாதார பாதுகாப்புக் கொண்ட உணவுகள் மற்றும் பானங்களை சாதாரண விலையில் பெற்றுக்கொள்ள முடியும்.(ம-7)

# பயணிகளின் போக்குவரத்துக்காக மேலதிகமாக 500 பேருந்துகள்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

பயணிகளின் போக்குவரத்துக்காக 500 பேருந்துகளை அடுத்துவரும் இடைக்கால பாதீட்டின் ஊடாக இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்ய எதிர்பார்ப்பதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாணவர்களின்நலன் கருதி, இந்திய அசோக் லேலன்ட் நிறுவனத்திடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, பயன்படுத்தாமல் உள்ள 100 பேருந்துகளை வாடகை அடிப்படையில் பெற்று பயன்படுத்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த பேருந்துகளில் பயணிக்கும் மாணவர்களின் பாதுகாப்பு கருதி, புதிதாக ஓட்டுநர்களை பணிகளில் சேர்த்துக்கொள்ளும் அதேநேரம் பெண் நடத்துநர்கள் பணிகளில் ஈடுபடுத்தப் படவுள்ளனர்.

இவர்களுக்கு பகல் போசனத்துக்கும் நிதியொதுக்கீடு செய்யப்படவுள்ளது.

முதலில் மாதிரித் திட்டமாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த திட்டம், வரும் காலங்களில் காலி, மாத்தறை போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ம-7)

# எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர், முகாமையாளரை கைது செய்க

## கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் உத்தரவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் எரிபொருளை பதுக்கி வைப்பதற்கு உடந்தையாக இருக்கும் நோக்கில் தனி நபரொருவருக்கு பெருந்தொகை எரிபொருளை வழங்கிய எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர், முகாமையாளர் மீது உரிய விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களை கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது .

கிளிநொச்சி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது சட்டத்துக்கு முரணான வகையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 31 பரல்கள் அடங்கிய 6000 லீற்றர் டீசல் 210 லீற்றர் பெற்றோல் என்பன கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபரொருவரும் கைது செய்யப்பட்டிருந்தார்.

மேற்படி மீட்கப்பட்ட சான்றுபொருட்களும் குறித்த சந்தேக நபரையும் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் பி ஆர் ஸ்மாத் ஜெமில் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் கவனத்தில் எடுத்த மன்று எரிபொருளுக்காக மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்ற இக்காலகட்டத்தில் ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து இவ்வாறு பெருந்தொகையான எரிபொருள் மூன்றாவது நபருக்கு விற்பனை நோக்கில் வழங்கப்பட்டிருப்பது தொடர்பில் உரிய விசா ரணை மேற்கொண்டு குறித்த எரிபொருளை வழங்கிய எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் மற்றும் முகாமையாளர் தொடர்பில் உரிய விசாரணை மேற்கொண்டு குறித்த சந்தேகநபர்களை கைது செய்து மன்றில் முன்னிலைப்படுத்துமாறு உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு கட்டளையிட்டுள்ளதுடன் மேற்படி எரிபொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 11ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளையிட்டுள்ளது. (ம-7,315)



யாழ். பாதுகாப்புப் படைகளின் புதிய கட்டளைத் தளபதியாக கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்ட மேஜர் ஜெனரல் சந்தன விஜேசுந்தர நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசனை யாழ். மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். (ம-7,33)

25ம் ஆண்டு நினைவு




அமரர் அருணாசலம் தங்கத்துரை
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தோற்றம்:- 1936.01.17
மறைவு:- 1997.07.05
அரசியலில் எனக்கு ஆசானாய் நல்வழிகாட்டிய தங்களை ஒருபோதும் மறவேன்...!
மூளாய் 077 727 9238 (C-4578)
தங்க.முகுந்தன்
முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் (TULF)

கண்ணீர் அஞ்சலி




யாழ்.நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் விசேடகல்வி ஆசிரியராக கடமையாற்றும் விஜயநிதி செல்வச்சந்திரன் அவர்களின் பாசமிகு தந்தையார்
அமரர் ஆறுமுகம் இராசகுமார்
பிறப்பு: 15.06.1960
இறப்பு: 03.07.2022
அவர்கள் 03.07.2022 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(12066)
விசேடகல்விப் பிரிவு
யாழ்ப்பாணம் கல்வி வலயம், யாழ்ப்பாணம்.

ஏழாம் ஆண்டு நினைவு நாள்



பத்மநாதன் பாவலன்
மலர்ந்தது: 21.01.1991
மறைந்தது: 05.07.2015
எமை விட்டுப் பிரிந்து நீ, திரும்பிவர முடியாத தூரம் சென்றுவிட்டாய்!
ஆனால் உனது நினைவுகளாலேயே துடிக்கிறது எமது இதயம்...
(12057)
1ம் கட்டை ஒழுங்கை, பருத்தித்துறை.
அன்பட்டன் குடும்பத்தினர்

கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர்ப் பூக்கள்



எமது கலாமன்ற சேவையில் தனது துறை சார்ந்து சேவையாற்றிவரும் சிதம்பரயோதி தமிழருவி த.சிவகுமாரன் அவர்களின் பாசமிகு தந்தையும் கலாமன்றத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கிவரும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் திரு.S.சிறீசற்குணராசா அவர்களின் பாசமிகு மாமனாருமாகிய
அமரர் கந்தையா தம்பிராசா
அவர்களது மறைவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேர பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(C-4577)
கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் - யாழ்.கிளை
நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் மரணத்தின் விளிம்பில் உள்ளது

## அமெரிக்க பொருளாதார நிபுணர் எச்சரிக்கை

**(வோஷிங்டன்)**

**இலங்கையின் பொருளாதாரம் மரணத்தின் விளிம்பில் இருப்பதாக அமெரிக்க பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹான்கே தெரிவித்துள்ளார்.**

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ள அவர், இலங்கையின் பணவீக்கம் தற்போது 122 வீதமாக உயர்ந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் கூட இலங்கைக்கான கடன் முறையை நிராகரித்துள்ளது என்றும் அந்த நிதியத்தால், இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக 16 வேலைத்திட்டங்கள் தொகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் இலங்கை அதிகாரிகள் எவரும் அந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம், உலகில் வருடமொன்றுக்கு அதிக பண வீக்க விகிதம் பதிவாகிய நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# இலங்கை அரசிற்கு எதிராக இத்தாலியில் ஆர்ப்பாட்டம்

(வத்திக்கான்)

கோட்டா, ரணில் அரசாங்கத்தை உடனடியாக வீட்டுக்கு அனுப்புவோம் என்ற கோஷத்துடன் இத்தாலியின் பிரேசியா நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் அதன் அடக்குமுறைக் கொள்கைகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நாடகமொன்றையும் ஏற்பாடு செய்திருந்தது.

இந்த எதிர்ப்பு நாடகத்தில் இலங்கையைச் சேர்ந்த நடிகர்களும் பங்கெடுத்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# அஞ்சல் திணைக்கள ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டது

(கொழும்பு)

அஞ்சல் தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்திருந்த தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து, கடந்த ஜூன் 28 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது.

நாட்டில் நிலவும் நெருக்கடி காரணமாக வாரத்தில் செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய 3 நாட்களில் மாத்திரம் அஞ்சல் நிலையங்கள் ஊடாக சேவைகளை முன்னெடுக்க அஞ்சல் திணைக்களம் கடந்த வாரம் தீர்மானம் மேற்கொண்டிருந்தது.

இந்த தீர்மானத்தின் ஊடாக சனிக்கிழமை பணியாற்றுவதன் மூலம் தமக்கும் கிடைத்து வந்த மேலதிக கொடுப்பனவு இல்லாது போவதாக தெரிவித்து மேற்படி தீர்மானத்துக்கு எதிராக அஞ்சல் தொழிற்சங்கம் இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கும் நியமங்களை மாற்றியமைக்க தயார்

(கொழும்பு)

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளை, ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கும் போது தடையாக உள்ள வயது வரம்புத் தடையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதியளித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த சுசில் பிரேமஜயந்த, அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களில் பலர், ஆசிரியர் சேவையில் இணைந்துகொள்ள விருப்பம் வெளியிட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார்.

அரச சேவையாளர்களின் நியமன வயது வரம்பு 45 ஆக உள்ளது. எனினும் ஆசிரியர் சேவைக்கான நியமங்களின் படி, 35 வயதுக்கு உட்பட்டவர்களே சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இந்த நிலையில், இந்த வயது வரம்புக்கு அப்பாற்பட்ட, அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்காக நியமங்களை மாற்றியமைக்க அரசாங்கம் தயாராக உள்ளது.

எனினும் இந்த விடயத்துக்கு தொழிற்சங்கங்களின் இணக்கங்களைப் பெற வேண்டியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்களின் இணக்கம் ஏற்பட்டால், இந்த விடயத்தில் தீர்வை எட்ட முடியும் என்றும் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (நி)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் ஓகஸ்டில் வெளியிடப்படும்

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை உரையாற்றிய போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த வருடம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் மாதம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

# வேலையிழந்த இளம் தந்தை விபரீத முடிவெடுத்து மரணம்

(கொழும்பு)

மதவாச்சியில் பொருளாதார நெருக்கடி காரணமாக வேலையில்லாமல் இருந்த 26 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையொருவர் தனது உயிரை மாய்த்துள்ளார்.

குறித்த நபர் கடந்த முதலாம் திகதி இரவு 7 மணியளவில் வீட்டில் இருந்து வெளியேறி மன்னார் வீதி, யகாவெவ புகையிரத கடவையில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரம் சென்று ரயில் வரும் வரை காத்திருந்துள்ளார்.

இந்த நிலையில், தலைமன்னாரில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற ரயிலுக்கு எதிரே ஓடி வந்து தண்டவாளத்தில் தலையை வைத்து உயிரை மாய்த்துள்ளார்.

உயிரிழந்தவர் மதவாச்சி பிரதேசத்தை சேர்ந்த சுஜித் தில்ஷான் என்ற 26 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையாகும்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## தீவிரமடையும் நெருக்கடி நிலை

# 850 முதல் 1000 ரூபாய் வரை விற்பனையாகும் மண் அடுப்புகள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் நாட்டில் தற்போது நிலவும் எரிவாயு தட்டுப்பாட்டால் மண் அடுப்புக்களுக்கு அதிக கேள்வி ஏற்பட்டுள்ளது.



அத்துடன், மிகக் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்பட்ட மண் அடுப்புகளின் விலைகள் தற்போது 850 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

முன்னதாக குறைந்தளவானோரே மண் அடுப்பை கொள்வனவு செய்ததாக உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

எனினும் தற்போது, அதிகளவான கேள்வி நிலவுவதாக மண் அடுப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர். (நி)

# இந்தியாவில் இருந்து பால்மாவை இறக்குமதி செய்ய தீர்மானம்

(கொழும்பு)

இலங்கைக்கு தேவையான பால்மாவை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனை அவசரத் தேவையாகக் கருதி, இலங்கையின் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும், நாட்டுக்குத் தேவையான பால்மாவை பெருமளவு இறக்குமதி செய்வதற்கும் இந்தியா ஒத்துழைப்புத் தெரிவித்துள்ளது.

உணவு பதப்படுத்துதல் மற்றும் பால் உற்பத்தி துறைகளில் அதிக ஒத்துழைப்பை வழங்குவதற்கான விடயங்களை ஆராய இந்திய ஆய்வுக்குழுவொன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யும் எனவும் இந்தியாவின் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான தற்போதைய கடன் திட்டத்தின் கீழ் இந்தியாவில் இருந்து பால் மாவை இறக்குமதி செய்ய முடியும் எனவும், இது இலங்கையில் உள்ள குழந்தைகளின் போசாக்கு மட்டத்தை உயர்த்துவதற்கு பங்களிக்கும் எனவும் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (நி)

# சஜித்-மைத்திரி அவசர சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் 'தேசிய சீரத்திருத்தங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள்' தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீண்டும் பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கோவளம் உதயதாரகை கால்பந்தாட்ட தொடரின்

# இறுதிப் போட்டிக்கு நவிண்டில் கலைமதி அணி தகுதி



கற்கோவளம் உதயதாரகை விளையாட்டு கழகம் நடத்தும் கால்பந்தாட்ட தொடரின் அரையிறுதி போட்டியானது நேற்று முன்தினம் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதன் அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதியது.

நவிண்டில் கலைமதி அணி வீரர்கள் ஆட்டம் ஆரம்பமாகி 5 ஆவது நிமிடத்தில் பில்லா 9 ஆவது நிமிடத்தில் தேவராஜ் 15 ஆவது நிமிடத்தில் விது ஆகியோரால் அடுத்து கோல்களை போட்டு மனோகரா அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர்.

ஆனால் சற்றும் சளைக்காமல் போராடிய அல்வாய் மனோகரா அணி வீரர் சுயாந் இரு கோல்களை போட்டு அசத்த இடைவேளைக்கு முன்னர் நவிண்டில் கலைமதி அணி 3:2 என்ற கோல் முன்னிலை வகித்தனர்.

இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் சம பலத்துடன் ஆட்டத்தை தொடர்ந்தனர்.

இந்நிலையில் நவிண்டில் கலைமதி அணியினருக்கு தண்டனை உதை கிடைத்தது.

இதனை அவ்வணி வீரர் பில்லா சரியாக பயன்படுத்தி கோலாக்க ஆட்ட நேர முடிவில் நவிண்டில் கலை மதி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. (6-90)

# நல்லூர் ரோட்டரிக் கழகத்தினால் உதவிப் பொருட்கள் வழங்கி வைப்பு



நல்லூர் ரோட்டரிக் கழகத்தினால் கொழும்புத்துறை வயோதிபர் இல்லத்துக்கு ஒருதொகை உணவுப் பொருட்கள் மற்றும் உடுபுடவைகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

கொழும்புத்துறை வயோதிபர் இல்ல பொறுப்பதிகாரியின் வேண்டுகோளின் அடிப்படையில் இவை வழங்கி வைக்கப்பட்டன.

நல்லூர் ரோட்டரிக் கழகத் தலைவர் ரோட்டரியன் த.ரவினதாஸ் அவர்களினால் முதியோர் இல்ல பொறுப்பதிகாரி அருட்சகோதரி பிரின்சில்லா அவர்களிடம் உதவிப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நல்லூர் ரோட்டரிக் கழகத்தின் செயலாளர் எம்.ஜீர்த்தன், முன்னாள் தலைவர் ஆர். ரோய் உட்பட பலர் கலந்து கொண்டனர். நல்லூர் ரோட்டரிக் கழகத்தின் 2022/2023 ஆண்டுக்கான முதலாவது செயற்திட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2656

**பந்துலலா்**

அப்பா லேடீஸிக்கு மட்டும் எப்படி முடி நீளமா வளருது?



மகனே செடியா இருந்தாலும் முடியா இருந்தாலும் களிமண் இருக்குற இடத்தில தான் நல்லா வளரும்

**சுனைனா**

வெயிட் பன்னு சிக்னல் விழுந்ததும் போவோம்



இல்லைனா கழுதைங்க Rules ah மதிக்காம போகுதுனு சொல்லுவாங்க

**கோபி**

ஒரு ரூபாய் காய்ன் பொக்ஸ்ல பேசுனவங்களுக்குத் தெரியும்



ஒரு நிமிசத்தோட மதிப்பு என்னென்னு

**லக்சலா**




**கவின்**

அவமானத்தை சேகரித்து வை வெற்றி உன்னைத் தேடி வரும். கடவுள்



பெட்டி புல் ஆய்டுச்சு இத கொடுத்துட்டு கடவுள் கிட்ட இன்னொரு பெட்டி வாங்கிட்டு வாரேன்

**அனோஜா**

அம்மா: டேய் கல்யாணம் ஆகனும்ன்னு நல்லபடி சாமியை கும்பிட்டு ஒரு விளக்கு ஏத்து




ஏன்னே....

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தற்போதைய நிலவரம் ஆசிய நாடுகளுக்கான ஒரு எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய கடன்நெருக்கடியானது ஆசிய நாடுகளிற்கு ஒரு எச்சரிக்கை என தெரிவித்துள்ள முன்னாள் மலேசிய பிரதமர் மகாதீர் முகமட் நாணயத்தை மோசமாக நிர்வகித்ததும் மோசமான முதலீட்டுக்கொள்கையுமே இதற்கு காரணம் எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றிற்கான பேட்டியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய கடன் நெருக்கடியானது ஆசிய நாடுகளிற்கான ஒரு எச்சரிக்கை.

ஆசிய நாடுகள் பொறுப்புணர்வுள்ள நிதிக்கொள்கையை பின்பற்ற வேண்டும். அல்லது மன்னிக்காத சர்வதேச நாணய நிதியத்தின் கரங்களில் சிக்க வேண்டியிருக்கும்.

கடன் வழங்கியவர்களிற்கு செலுத்துவதற்கான வலுவான நாணயம் இருப்பு இலங்கையிடம் இல்லாததே அதன் பிரச்சினை.

அனைவரும் இலங்கையின் பாதையில் செல்வதற்கான சாத்தியக் கூறுகளால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இது அனைவருக்கும் ஒரு பாடம்.

சர்வதேச நாணய நிதியம் அல்லது உலக வங்கியிடம் சென்றீர்கள் என்றால் அவர்கள் உங்கள் கடன்களை திருப்பிச் செலுத்தும் விடயத்தில் மாத்திரம் அக்கறை செலுத்துவார்கள்.

குறிப்பிட்ட நாட்டிற்கு பொருளாதார ரீதியில் அல்லது சமூக ரீதியில் என்ன நடக்கின்றது என்பது குறித்து அவர்களிற்கு கவலையில்லை.

அவர்கள் நாட்டையும் அதன் பொருளாதார கொள்கையையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு முயற்சிப்பார்கள்.

அதாவது நாங்கள் அவர்களிடம் சரணடைய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

## ஓரிரு நாட்களில்

# தனியார் பேருந்து சேவை முற்றாக தடைப்படும்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு நாட்களில் தனியார் பேருந்து சேவைகள் முழுமையாக தடைப்படக் கூடும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் 5 முதல் 10 சதவீதமான தனியார் பேருந்துகளே சேவையில் ஈடுபடுவதாக அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் அதன் அருகிலுள்ள சில இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து டிப்போக்களில் மாத்திரம் தனியார் பேருந்துகளுக்கு நேற்று முன்தினம் எரிபொருள் வழங்கப்பட்டது.

அத்துடன் கொட்டாவை - மாக்கும்புர பலநோக்கு போக்குவரத்து மத்திய நிலையத்தில் நேற்று சில தனியார் பேருந்துகளுக்கு டீசல் வழங்கப்பட்டது.

இதன் காரணமாக ஹைலெவல் வீதியில் நேற்றைய தினம் சில பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுள்ளன.

சுமார் 3 முதல் 4 நாட்கள் வரிசையில் நின்று பேருந்து பணியாளர்கள் எரிபொருளை பெறுவதோடு சிலர் நோய் நிலைமைக்கு உள்ளாகியுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (நி)

## எரிபொருள் தட்டுப்பாட்டால்

# பாய் மரம் கட்டி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள்



(தருமபுரம்)

பூநகரி பள்ளிக்குடா மீனவர்கள் எரிபொருள் இல்லாத நிலையில் பாய் மரம் கட்டி தமது வாழ்வாதாரத்திற்காக தொழில் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

பாய் மரம்என்பது காற்று வீசும் திசையை நோக்கி தொழில் செய்யும் பண்டைய முறையாகும். தொழிலுக்கு சென்றால் தான் உணவு என்ற நிலையில் ஒரு சில மீனவர்கள் இவ்வாறு தொழிலில் ஈடுபட்டுள்ளனர். எரிபொருள் தட்டுப்பாடு பல்வேறு தரப்பினரின் வாழ்வாதாரத்தையும் வெகுவாக பாதித்துள்ளது. (நி-6-316)

# பிள்ளைகள் பசியால் அழுவதை பார்க்க முடியவில்லை

## புலம்பிய தந்தைக்கு உதவிய மக்கள்

(கொழும்பு)

உணவு மற்றும் பால் இன்றி தனது பிள்ளைகள் பசியில் அழுவதை பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை எனக் கூறி 37 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் வீதியில் பதாகையை வைத்துக்கொண்டு அழுது புலம்பியுள்ளார்.

இந்த சம்பவம் ஹெம்மாத்தகம நகரில் நடந்துள்ளது. நகரில் பிரதான வீதியில் நபர் ஒருவர் அழுதுகொண்டிருப்பதை பார்த்த பொலிஸார், வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் அவருக்கு உணவு உள்ளிட்ட தேவையான பொருட்களை அன்பளிப்பு செய்துள்ளனர்.

ஹெம்மாத்தகம சியம்பலாவ என்ற பிரதேசத்தில் வசித்து வரும் பீ.எம்.சுசந்த குமார என்ற இந்த நபர், கட்டிட நிர்மாண தொழிலாளி அவருக்கு 7 மற்றும் 13 வயதான ஆண் பிள்ளைகள் உள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சீமெந்து விலைகள் அதிகரித்துள்ளதால், தனது தொழில் நின்று போயுள்ளதாக சுசந்த குமார தெரிவித்துள்ளார். (நி)

# கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகம் - காரைக்கால் பகுதியை சேர்ந்த 5 மீனவர்களும் மயிலாடுதுறையை சேர்ந்த 7 மீனவர்களும் நேற்று முன்தினம் பருத்தித்துறை கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில், எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றத்திற்காக கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, காங்கேசன்துறை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் மீனவர்களை நேற்று முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது, எதிர்வரும் 8 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (நி-6-33-60)

# இராசிபலன்

05.07.2022
ஆனி 21, செவ்வாய்க்கிழமை
சஷ்டி பிற்பகல் 3.57 மணிவரை

பூரம் முற்பகல் 8.01 மணிவரை
சுப நேரம் -10.27-11.57 மணிவரை
இராகு காலம் -2.57-4.27 மணிவரை

குமார சஷ்டி விரதம், இரவு நடேசரபிசேகம்,
சந்திராஷ்டமம்- அவிட்டம்.

வள்ளவன்

**மேஷம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள்,கனவுகள் நனவாக அம்பிகையை வழிபட வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்** நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்,சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**கும்பம்** கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், பொறுமையாக இருந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்** உறவினர்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

உன் முகம் சுருங்கினாலும் உன் உள்ளம் சுருங்காமல் பார்த்துக்கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிச்சைப் பாத்திரம் ஏந்த வைத்த பெருமை தற்போதைய ஆட்சியாளர்களையே சாரும்

## யாழ்.மறை மாவட்ட ஆயர்


(யாழ்ப்பாணம்)

**நமது நாட்டை பிச்சைக்கார நாடாக மாற்றிய பெருமை தற்போதைய ஆட்சியாளர்களையே சாரும் என யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.**

தற்போதைய பொருளாதாரநெருக்கடி நிலைமைகள் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

74 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டவர்கள் மக்களை தம்முடைய வாக்குகளுக்காக பாவித்தார்கள்.

ஆனால் இந்த நாட்டிலிருந்த வளத்தை எல்லாம் சுரண்டி விட்டார்கள் கடைசியில் மிக பாரதூரமான சுரண்டல்களுடன் நாடு



பிச்சை எடுக்கின்ற நிலைக்கு வந்து விட்டது.

இந்து சமுத்திரத்தின் முத்து என்று சொல்லப்பட்ட இந்த நாடு இன்று பிச்சை எடுக்கின்ற நாடாக மாறி உள்ளதற்கு காரணமான அனைவருமே பதில் சொல்ல வேண்டும்.

மோசடி ஊழல் நிறைந்த இந்த நாட்டு அரசாங்கத்தை நம்பி எந்த நாடும் நமக்கு உதவுவதற்கு தயாராக இல்லை அதனை முதலில் நிவர்த்தி செய்தால் மாத்திரமே எமக்கு ஏனைய நாடுகளின் உதவி கிடைக்கும் என அவர் தெரிவித்தார். (நி-6-33)



வரலாற்றுச் சிற ப்பு மிக்க யாழ்ப் பாணம் மாவிட்ட புரம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலய த்தின் காம்யோற் சவப் பெருவிழா நேற்றுத் திங்கட்கிழமை காலை7 மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமானது. (படம்:ரவிசாந்)

# வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சபேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை 6 ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்த உற்சவமும் அன்று மாலை 7 மணிக்கு கொடியிறக்கும் உற்சவமும். நாளை மறுதினம் மாலை 5.30 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் இடம் பெறும் என் ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (நி-6)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு:**

தொலைபேசி:
076 097 3127
021 221 7603
Viber: 076 636 3378
E.mail:
valampurii@yahoo.com


# வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தால் இலவச மரவள்ளித்தடி விநியோகம்



(முறிகண்டி)

வன்னி தமிழ் மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உணவுப் பாதுகாப்பை தன்னிறைவாக்கும். மரவள்ளித் தடி வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி சேவைச் சந்தை முன்பாக இடம் பெற்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் முகமாகவும், மரங்களை நடுவதை ஊக்குவிக்கும் முகமாகவும் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த மரவள்ளி தடிகளை தலா ஐந்து தடிகள் எனும் அடிப்படையில் பொதுமக்களிற்கு இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது. அந்நிகழ்வில் 5000 மரவள்ளி தடிகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-100)



யாழ்.மாவட்ட இளைஞர் சம்மேளன 2022 ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.இதில் யாழ்.மாவட்ட இளைஞர் கழகங்களின் சம்மேளத்தின் தலைவராக நல்லூர் இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் துவாகரன் தெரிவு செய்யப்பட்டார்.

(படம்-சிவசாந்தன்,கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மைமிக்க செயல் வீரன்
# அமரர். சொக்கநாதன் யோகநாதன்

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் அரச சார்பற்ற நிறுவனத்தின் மூத்த உறுப்பினருமான அமரர்.**சொக்கநாதன் யோகநாதன்** அவர்கள் யாழ்ப்பாணத்தில் சொர்க்காபுரி என அழைக்கப்படும் தெல்லிப்பளை துர்க்கா அம்மன் ஆலய சூழலில் அமைந்துள்ள பாலன் வளவு எனும் இடத்தில் 10.10.1948 இல் இவ்வுலகில் உதித்தார். ஆன்மீகத்திலும் பொதுச் சேவையிலும் நாட்டம் கொண்ட யோகர் சுவாமிகளின் நினைவாக இவருக்கு பெற்றோர் யோகநாதன் என்று பெயர் சூட்டினர். இவரை நாதன், பால்கடை யோகநாதன், T.RO நாதன் என்று அறியப்பட்டவர்களும் உள்ளனர்.

இவர் தனது இளமைக் கல்வியினை மகாஜனாக் கல்லூரியில் கற்றபோது பர்டசாலைக் காலத்தில் திறமையான மாணவனாகவும், சாரண இயக்கத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டு சாரணியத்தில் ஜனாதிபதி விருதினைப் பெற்றமை சிறப்பம்சமாகும். உயர் விழுமியப் பண்புகளையும் தலைமைத்துவ பண்புகளையும், கொண்டு விளங்கிய இவர் தனது இளமைக்காலத்தில் சமூகத்தின் மீது கொண்ட அதீத அக்கறையினால் சாத்தியமாகக் கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்தி கல்வி, பொருளாதார அபிவிருத்தி என்று பல்வகையிலும் துடிதுடிப்பாக இளைஞர்களை அணிதிரட்டி மக்களுக்காக சேவையாற்றிய சமூக ஆர்வலராவார்.

1970ஆம் ஆண்டுகளில் தனது இளவயதிலேயே மகாதனையில் ஒரு வாசிகசாலையை ஊர் மக்களுக்காக ஆரம்பித்து வைத்ததில் முக்கிய பங்கு வகித்தார். பொதுச் சேவை நோக்கத்தோடு தமிழரசுக் கட்சியின் அங்கமான இளைஞர் பேரவையுடன் தன்னை இணைத்துக்கொண்டார். சமூக சேவகராக வளர்ந்து வந்த இவர் தமிழ் மண்ணையும், மக்களையும் நேசிக்கத் தொடக்கினார். தெல்லிப்பளை பிரதேச மக்களுக்காக பல சமூக சேவைகளிலும் பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டு வந்தார்.

1971 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தனது 22 ஆவது வயதில் விசுவமடு பிரதேசத்திற்கு சென்று அங்கு படித்த வாலிபர் திட்டமான, ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தில் இணைந்து இளைஞர்களை வலுவூட்டினார். அக் கிராமத்து மக்களுக்குத் தேவையான சலுகைகளைப் பெற்றுக்கொடுப்பதிலும், மக்களுக்கு ஏற்படும் முறைகேடுகளை அதிகாரிகளுடன் வாதிட்டு அவர்களுக்குரிய தேவைகளை முன்னின்று பெற்றுக்கொடுப்பதிலும் அயராது உழைத்தார். அப் பிரதேசத்தில் இவரினால் தொடங்கப்படும் பணிகளுக்கு மக்களிடமிருந்து கிடைக்கும் வரவேற்பும் ஒத்துழைப்பும் இவரைக் கவர்ந்து வெற்றிகண்டது.

அது மட்டுமல்லாது விவசாயத்தினை பிரதான நோக்கமாகக் கொண்டிருந்த மக்களின் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்டு சில இளைஞர்களை இணைத்து பாடசாலை ஒன்றினை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார். சிறிய அளவிலான பாடசாலைக் கட்டடத்தினை அமைத்து விசுவமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இன்று விசுவமடு மகாவித்தியாலயமாக உயர்ந்து கல்வி வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கின்ற பெருமை அமரர். சொக்கநாதன் யோகநாதன் அவரையும் சாரும்.

பின்னர் தமிழர் தாயகத்தில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து அவர் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காதவை. குறிப்பாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரகத்தின் (UNHCR) மற்றும் அங்கத்துவ நிறுவனமான யாழ். சமூக செயற்பாடு நிறுவனத்திலும் (JSAC) நீண்ட காலம் பணியாற்றி அதனூடாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளப்பெரும் சேவையாற்றியுள்ளார். பொன்னாலை, சுழிபுரம், அராலி போன்ற பல இடங்களில் நூற்றுக் கணக்கான வீடுகள், கிணறுகள் அமைத்துக் கொடுத்தும் மக்களுக்கான உணர்வுபூர்வமான இதர மனிதாபிமான பணியையும் மேற்கொண்டு இருந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் தொண்டு நிறுவனப் பணியுடன் கட்டமைப்பு ரீதியாக ஒரு அமைப்பின் ஊடாக வினைத்திறனான புனர்வாழ்வு, புனரமைப்பு உதவிகள் சாத்தியமாகும் என்ற எண்ணத்தில் உறுதியாக இருந்து யாழ்.மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனத்தின் இணையம் எனும் கூட்டமைப்பினை தோற்றினார்.

இதன் பின்னர் 2009 இல் ஏற்பட்ட பாரிய அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்துடன் (CFCD) இவரது பணி புதிய வீரியத்துடன் மிளிரத் தொடங்கியது. பின்னர் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் போரினால் பாதிக்கப்பட்ட ஏழை மாணவர்களுக்கு கல்விக்காக உதவிகளை வழங்குவதற்கு புலம்பெயர் தேசங்களில் உள்ள தொண்டு அமைப்புக்களுடன் நல்லுறவுகளைப் பேணி நம்பிக்கையுடன் தொடர்பு கொண்டு அவர்களிடம் உதவிகளைப் பெற்று மாணவர்களுக்குரிய உதவிகளைப் பெற்றுக்கொடுத்து வந்தார். இந் நிறுவனம் வட மாகாணத்தில் முதன்மையான தொண்டு நிறுவனங்களில் ஒன்றாக திகழ்ந்து வந்தமைக்கு முதுகெலும்பாகவும், அதைத் தாங்கி நிலைநிறுத்தும் தூணாகவும் நின்றவர் அமரர். சொக்கநாதன் யோகநாதன் அவர்களே.

இவரின் சேவைக்காலப்பகுதியில் UNDP, USAID (IDEA) USAID (SCORE), Child First -UK, War Affected Peoples Association



(WAPA),TECH Outreach Malaysia, Tech Norway, Income - Canada இன்னும் சில நன்கொடை அமைப்புக்களுடன் செயற்றிட்டங்களை தன்னகப்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், வறிய மாணவர்களது கல்வித் தரத்தினை உயர்த்திக் கொள்வதற்கும் முழுமூச்சாக மக்களுக்கான உதவிகளை உரிய நேரத்தில் சென்றடைய வேண்டும் என்ற இலக்கில் இரவு- பகலென பாராது அயராது அர்ப்பணிப்புடன் உழைத்த கர்மயோகி.

தொடர்ச்சியாக விசுவமடு சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் அடுத்த சந்ததிகளுக்கு மிளிர்ந்து வருவதற்காக அமரர்.சொக்கநாதன் யோகநாதன் அவர்கள் புலம்பெயர் தேசத்தில் அமைந்திருக்கும் Child First –UK அமைப்பில் சேவையாற்றிய அமரர்.அப்பையா சிறிதரன் அவர்களுடன் தேவைப்பாடுகளை கலந்துரையாடினார். பாதிக்கப்பட்ட மக்களது பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு செயற்படும் ஆற்றல் கொண்டவர்களாக இருவரும் இருந்தமையினால் மக்களின் நலனில் மிகவும் அக்கறை கொண்ட இவர் Child First - UK அமைப்பின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் விசுவமடு சனசமூக நிலையம் அமைந்துள்ள காணியில் மிகப்பிரமாண்டமான இரு தளங்களைக் கொண்ட திறன் விருத்தி நிலையத்தினை ( Child First UK- House) அமைத்து வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் முழுமையான திட்டங்களை உள்வாங்கி அதன் தேவைப்பாடுகளை பகுப்பாய்வு செய்து அக்கிராமத்தினை முன்மாதிரியாக செயற்படுத்துவதற்கு ஊன்று கோலாகத் திகழ்ந்தவர் அமரர்.சொக்கநாதன் யோகநாதன்.

சேவையே தனது குறிக்கோளாகக் கொண்டு சேவையாற்றியவர். எச் சந்தர்ப்பத்திலும் தன்னை விளம்பரப்படுத்தவோ அல்லது தன்னால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை தன் பெயர் கூறவோ விரும்பாத ஒரு மேன்மையான குணங்களைக் கொண்ட இவர் செயற்றிட்டங்களின் முன்மொழிவுகளை வழங்கும் போது மக்களின் உண்மை தேவைகளை கண்டறிந்து உடனடி வெளியீடுகளை விரைவாக பெறும் வகையில் விரைவான முறையில் மதீப்பீடுகளை மேற்கொள்வார். எந்த தகவல் கேட்கும் போதும் விரல் நுனியில் அதனை வழங்கக்கூடிய திறன், வேறு யாரிடமும் இதுவரை கண்டதில்லை.

உலகமெங்கும் பரவி வந்த கொரோனாவின் தாக்கத்தினால் எத்தனையோ மக்கள் வறுமையின் பசியினால் வாடியபோது உடனடியாக தன்னால் முடிந் தளவு உதவிகளைப் பெற்று உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார். 2 ஆம் அலையின் தாக்கம் மக்களை அதிகமாகப் பாதித்து வந்தது. இதில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற அவாவில் புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் உறவுகளுடன் தொடர்பு கொண்டு மருத்துவ உபகரணங்களுக்குரிய தேவைப்பாடு கோரிக்கைகளை கலந்தாலோசித்து உதவிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் பொது மருத்துவமனை Covid-19 பிரிவுக்கு அவசர மருத்ததுவ உபகரணங்கள் வழங்குவதற்குரிய ஒழுங்கு முறைகளை மேற்கொண்டார். இதுவே இவர் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கடைசியாக ஆற்றிய சேவையாகும்.

உலகமெங்கும் கடந்த இரண்டரை வருடகாலத்திற்கும் மேலாக பரவி அச்சுறுத்திக் கொண்டு மனித உயிர்களை பலியெடுத்து வரும் கண்ணுக்குத் தெரியாத எதிரியான கொரோனா வைரஸ் ஆனது பணிகளுக்காகவே தன்னை அர்ப்பணித்த பெருமகானான அமரர்.சொக்கநாதன் யோகநாதன் அவர்களையும் தாக்கியது.

குடும்பத் தலைவனாக தனது கடமைகளை நிறைவேற்றியதுடன் மேலும் பல குடும்பங்களது வாழ்வு வளம் பெற குணக்குன்றாய் விளங்கிய ஒருவர் பல குழந்தைகளின் வாழ்விற்கு விடியலைக்கொடுத்த குழந்தை மனம் படைத்த அமரர்.சொக்கநாதன் யோகநாதன் உடல் நிலை கவலைக்கிடமாகி வைத்தியசாலையில் இருந்தபோதும் கடைசியாக உச்சரித்த நாமம் **“எல்லோரும் ஒன்றிணைந்து மக்களுக்காக சேவை செய்யுங்கள்”** என்ற வாசகத்தை 05.07.2021 அன்று உதிர்த்து விட்டுச் சென்று ஒரு வருடமாகி விட்டது.

அமரர்.சொக்கநாதன் யோகநாதன் அவர்கள் இறுதி நாள்வரை சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்து தனது காலத்தின் பின்னரும் வழியமைத்து சமூக சேவை சாதனையாளராக என்றும் ஏழைகளின் மனதில் அணையாத் தீபமாக வாழ்ந்து கொண்டிருப்பீர். அவரின் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவன் துணையிருப்பார்.

“உங்கள் வழியில் எங்கள் தடங்கள் தொடரும். இதுவே நாங்கள் உங்களுக்குக் கொடுக்கும் இறுதி மரியாதை"

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

(12064)

**குடும்பத்தினர், இயக்குநர் சபை உறுப்பினர்கள்,**
**பணியாளர்கள்,**
**சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 88

### பணிவுக்கும் அடிமைத்தனத்திற்கும் இடையேயான வித்தியாசம்



ஒரு நாள் அசோக மன்னர் ஒரு புத்த துறவியின் காலில் விழுந்து வணங்கினார். அவருடைய தலை அந்தத் துறவியின் பாதத்தில் பட்டு விட்டது.

இதை அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த அமைச்சருக்கு சங்கடமாகப் போய்விட்டது. எவ்வளவு பெரிய சக்கரவர்த்தி அவரின் தலை ஒரு சந்நியாசியின் பாதத்தில் படுவதா? என கவலைப்பட்டார்.

அரண்மனைக்கு திரும்பியதும் அரசரிடம் அசோகச் சக்கரவர்த்தியின் சிரம் மதிப்புமிக்கது. அது சந்நியாசியின் காலில் படுவதா? என்று கேட்டார். அதற்கு அரசர் பதில் சொல்லவில்லை. சிரித்துக் கொண்டே போய்விட்டார். அதன் பிறகு ஒருநாள் அமைச்சரைக் கூப்பிட்டு எனக்கு மூன்று சிரங்கள் வேண்டும். முதலாவது ஆட்டின் தலை. இரண்டாவது புலியின் தலை. மூன்றாவது மனிதனின் தலை. எங்கே இருந்தாலும் கொண்டு வாருங்கள் என்றார்.

ஆட்டுத்தலை கிடைத்து விட்டது. புலித் தலையும் கிடைத்து விட்டது. பிறகு சுடுகாட்டுக்குப் போய் ஒரு மனிதத் தலையும் எடுத்துக்கொண்டு வந்து அரசரிடம் கொடுத்தார் அமைச்சர். அசோகர் பார்த்துவிட்டு நல்லது. இது மூன்றையும் எடுத்துக் கொண்டு போய் சந்தையில் விற்று விட்டு வாருங்கள்.

ஆட்டுத்தலை விற்றாகிவிட்டது. புலித்தலையும் விற்றாகிவிட்டது. மனிதத் தலையை மட்டும் வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. எல்லோரும் பார்த்து விட்டு விலகிப் போனார்கள்.

அமைச்சர் திரும்பி வந்து அரசரிடம் விடயத்தைச் சொன்னார். சரி மீண்டும் சந்தைக்குச் சென்று இலவசமாகவே தருகிறேன், வாங்கி கொள்ளுங்கள் என்று சொல்லச் சொன்னார் அரசர். அப்போதும் அதை வாங்க யாரும் முன்வரவில்லை. மறுபடியும் திரும்பி வந்து மன்னரிடம் விடயத்தைச் சொன்னார்.

அப்போது அசோகர் அமைச்சரே உயிரோடு இருக்கிற வரைக்கும் தான் மனிதனுக்கு மதிப்பு. இந்த தலைக்கும் மதிப்பு. உயிர் போன பிறகு அதன் மதிப்பும் போய் விடுகிறது. ஆகையினால் மதிப்பு இருக்கும் போதே பெரியவர்கள் பாதம் பணிந்து அந்த புனிதத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

பெரியவர்களை பணிவது நமக்கு பெருமை தரக்கூடிய விடயம் தான். இருந்தும் பணிவுக்கும் அடிமைத்தனத்துக்கு இடையிலான வித்தியாசத்தை புரிந்து கொண்டால் யாரைப் பணிய வேண்டும். யார் காலில் விழ வேண்டும் என்பதும் தெளிவாகப் புரிந்து விடும்.



Sukitharankutty

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## லிபியா பாலைவனத்தில் தாகத்தினால் 20 பேர் பலி



(லிபியா)

தாகத்தினால் உயிரிழந்த 20 பேரின் சடலங்களை லிபிய பாதுகாப்பு படையினர் பாலைவனப் பகுதியில் கண்டெடுத்துள்ளனர்.

பாலைவனப் பகுதியூடாக பயணம் செய்த லொறி சாரதி ஒருவரே இந்த சடலங்களை அவதானித்ததுடன், பொலிஸாருக்கும் அறிவித்துள்ளார்.

குப்ரா நகரில் இருந்து 320 கி.மீ. தொலைவில், சாட் நாட்டின் எல்லையில் இருந்து 120 கி.மீ. தொலைவிலும் உள்ள பாலைவனத்தில் சடலங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பிக்கப் வாகனத்துக்கு அருகில் சிதைவடைந்த நிலையில் சடலங்கள் காணப்பட்டுள்ளன. அவர்கள் 14 நாட்களுக்கு முன்னர் இறந்திருக்கலாம் என ஆரம்பகட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த பகுதியில் தற்போது 40 செல்சியல் வெப்பநிலை நிலவுவதால், வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து செல்ல முயற்சித்து குடிநீர் மற்றும் உணவு இன்றி இவ்வாறு மரணித்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இறந்தவர்களில் இருவர் லிபியாவை சேர்ந்தவர்கள். ஏனையவர்கள் சாட்டின் ஊடாக லிபியாவுக்கு வந்து வேறு நாடுகளுக்கு செல்ல முற்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

2011 ஆம் ஆண்டு லிபிய அரசு வீழ்த்தப்பட்ட பின்னர் வெளிநாடுகளுக்கு குடிபெயரும் ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை சேர்ந்த மக்கள் லிபியாவின் ஊடாக பயணித்து வருவது குறிப்பிடத்தககது. (நி)

## சிட்னியில் கடும் வெள்ளம் மக்களுக்கு எச்சரிக்கை



(கன்பெரா)

அவுஸ்திரேலியாவின் பெரிய நகரும், நியூ சவுத் வேல்ஸின் தலைநகரு மான சிட்னியில் கடும் வெள்ளம் ஏற்பட்டு ள்ளதாகவும் மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

[illegible] வெள்ளத்தில் சிக்கி இதுவரை ஒருவர் உயிரிழந்திருப்பதுடன் ஆயிரக்கண க்கானோரின் வீடுகள் முற்றாக சேதமடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் மாதத்தில் ஏற்பட்ட மழை மற்றும் வெள்ளப் பெருக்கில் சிக்கி 20 பேர் வரையில் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# உக்ரைனின் முக்கிய நகரத்தை கைப்பற்றியது ரஷ்யா

## ஒப்புக்கொண்டது உக்ரைன்

(கீவ்)

**உக்ரைனின் கிழக்கில் உள்ள முக்கிய நகரமான லுஹான்ஸ்கை ரஷ்யா முழுவதுமாக கைப்பற்றியுள்ளது.**

நேட்டா நாடுகளின் கூட்டமைப்பில் உக்ரைன் சேருவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்த ரஷ்யா அந்நாட்டின் மீது கடந்த பெப்ரவரி மாத இறுதியில் போர் தொடுத்தது.

இராணுவக் கட்டமைப்புகளை தாண்டி அடுக்குமாடி குடியிருப்புகள், பள்ளிக்கூடங்கள், வணிக வளாகங்கள், ஆலைகள் என தாக்குதல் வரம்பை ரஷ்யா நீட்டித்ததால் அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது உக்ரைனின் முக்கிய நகரமான லுஹன்ஸ்கை ரஷ்யா முழுவதுமாக கைப்பற்றியுள்ளது. இந்த தகவலை உக்ரைன் இராணுவம் உறுதி செய்துள்ளது.



கடுமையான சண்டையின் முடிவில் உக்ரைனிய படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி)

# பள்ளத்தில் கவிழ்ந்தது பேருந்து 16 பேர் பலி, பலர் காயம்

## இந்தியாவில் துயரம்

(டில்லி)

இந்தியா - ஹிமாச்சலப் பிரதேசத்தில் தனியார் பேருந்து ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சிறுவர்கள் உட்பட 16 பேர் பலியாகியுள்ளனர்.

ஹிமாச்சலப் பிரதேசம் - குலு மாவட்டத்திலிருந்து சைஞ் பகுதிக்கு பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்களை ஏற்றிச் சென்ற பேருந்து நேற்றுக் காலை 8 மணியளவில் நியோலி-ஷான்சர் பகுதியில் சோல்ஜர் பள்ளத்தாக்கில் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்தது.

இந்த விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினரும் அப்பகுதி மக்களும் ஈடுபட்டுள்ளனர். (நி)

# உக்ரைனில் போர் அழிவுகளை பார்வையிட்ட அவுஸ்திரேலிய பிரதமர்

(கீவ்)

உக்ரைனில் ரஷ்ய படையினர் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பகுதிகளிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய பிரதமர் அன்டனி அல்பனிஸ் உக்ரைனிற்கு 100 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர் இராணுவ உதவியை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

விளாடிமிர் புடினின் படையெடுப்பின் ஈவிரக்கமற்ற தன்மைக்கான அடையாளங்களாக மாறியுள்ள மூன்று நகரங்களிற்கு அவுஸ்திரேலிய பிரதமர் விஜயம் மேற்கொண்டுள்ளார். இந்த நகரங்களில் இருந்து ரஷ்ய படையினர் பின்வாங்கிய பின்னர் பாரிய படுகொலைகள் சித்திரவதைகள் இடம்பெற்றிருப்பதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.



குண்டுவீச்சினால் முற்றாக அழிக்கப்பட்ட வீடுகள் கண்ணிவெடிகளின் தடயங்கள் அழிக்கப்பட்ட விமான நிலையம் ஆகியவற்றினை பார்த்து அவுஸ்திரேலிய பிரதமர் அதிர்ச்சியடைந்தார்.

பின்னர் உக்ரைன் ஜனாதிபதியுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவுஸ்திரேலியா உக்ரைனிற்கு 14 இராணுவ கவச வாகனங்களையும், 20 புஸ்மாஸ்டர் வாகனங்களையும் வழங்கும் என அறிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தங்க இறக்குமதி மீதான தடை 16 ரஷ்ய அமைச்சர்கள், கோடீஸ்வரர்கள் மீதான தடைகள் குறித்தும் அவுஸ்திரேலிய பிரதமர் அறிவித்துள்ளார்.

ரஷ்யாவின் படையெடுப்பு பாரிய சர்வதேச சட்ட மீறல் என அல்பெனிஸ் தெரிவித்துள்ளார். (நி)

# ஆல்ப்ஸ் மலையில் பனிச்சரிவு 6 பேர் பலி, பலர் மாயம்



(வத்திக்கான்)

இத்தாலியின் ஆல்ப்ஸ் மலைத் தொடரில் தற்போது நிலவி வரும் வெப்ப நிலை காரணமாக பனிமலைகள் உருகத் தொடங்கியுள்ளதாகவும் இதனால் ஆபத்தான சூழல் அந்த பகுதியில் காணப்பட்டு வருவதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவமொன்றில் ஆல்ப்ஸ் மலை உச்சியை நோக்கி செல்ல முயற்சித்தவர்கள் மீது திடீரென பனிமலைகள் சரிந்து விழுந்ததில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 8 பேர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 12 பேருக்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய சூழலில் ஆல்ப்ஸ் மலைப்பகுதிக்கு யாரும் செல்ல முடியாத படி தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும், தடைகளை மீறி சென்றமையினாலேயே மேற்படி விபரீதம் நிகழ்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் வழங்கலில்

## விவசாயிகளுக்கு முன்னுரிமை

### முல்லைத்தீவு மாவட்ட செயலர் தெரிவிப்பு

(அக்கராயன்)

**முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகின்ற எரிபொருளில் விவசாயிகளுக்கு முதன்மையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.**




தற்போது இவ்வாண்டுக்கான சிறுபோக நெற்செய்கையின் அறுவடை தொடங்கி உள்ள நிலையில் விவசாயிகள் எரிபொருள் நெருக்கடியினால் அறுவடை மேற்கொள்வதில் பலத்த நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

பிரதேச செயலாளர்கள் ஊடாக மாவட்டச் செயலாளருக்கு எரிபொருள் தேவை தொடர்பாக விவசாயிகளினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும் விவசாயிகளுக்கு அறுவடைக்கு எரிபொருளினைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டாலும் மாவட்டத்திற்கான எரிபொருள் வரவு தற்போது குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக விவசாயிகள் உட்பட அனைவருக்கும் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றன என தெரிவித்தார். (நி-6-350)

# 'இளந்தென்றல்' விளையாட்டுக்கழக ஏற்பாட்டில் கிளிநொச்சியில் பாரம்பரிய விளையாட்டுகள்





(முறிகண்டி)

கிளிநொச்சி அம்பாள்குளம் பிரதேச இளந்தென்றல் விளையாட்டுக்கழக ஏற்பாட்டில் கலாசார விளையாட்டு நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது.

இதன்போது, தலையணை சண்டை, யானைக்கு கண் வைத்தல், கிறிஸ் மரம் ஏறுதல் உள்ளிட்ட கலாச்சார விளையாட்டுகள் இடம்பெற்றது. இதில் இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (நி-6-100)

# கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்துமாறு ஜெயபுரம் கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி ஜெயபுரம் கிராமத்தில் கசிப்பு உற்பத்தியினைக் கட்டுப்படுத்துமாறு பொது மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற இக் கிராமத்தில் அண்மைக் காலமாக கசிப்பு உற்பத்தியால் குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளதாக தெரிவித்தனர்.

கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அயல் கிராமங்களுக்கு கசிப்பு எடுத்துச் செல்வதை தடுப்பதற்கு பொலிஸார் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என தெரிவித்தனர். (நி-6-350)

# எரிபொருளை பெற்றுத்தருமாறு

## கிளி.மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் கோரிக்கை


(முறிகண்டி)


எரிபொருள் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு கோரி நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் பணிபுரியும் கிராம உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் இது தொடர்பாக கலந்துரையாடல் நேற்றுக் காலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பொதுமக்களிற்கான சேவையை உரிய நேரத்தில் வழங்க முடியாத நிலை காணப்படுவதாகவும், பொதுமக்களுக்கான சேவையை உரிய முறையில் முன்னெடுப்பதற்கு எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியாது உள்ளதாகவும் அரசாங்க அதிபரிடம் அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த கலந்துரையாடலின் போது எரிபொருள் கிடைக்கும் பட்சத்தில் கிராம உத்தியோகத்தர்களை முன்னிலைப்படுத்தி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மாவட்டத்தில் காணப்படும் எரிபொருளை ஓரளவேனும் பெற்றுக்கொடுக்க நட்வடிக்கை எடுக்கப்படும் எனவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (நி-6-100)





திருக்கேதீச்சரநாதர் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மன்னார், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணம் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து ஆயிரக்கணக்கான அடியவர்கள் பக்திபூர்வமாக கலந்து கொண்டு எண்ணெய்க் காப்புச் சாத்தினர். (படம்: ரவிசாந், ஜோசப்நயன்)

## பெற்றோல் வழங்கக்கோரி

# சுத்திகரிப்பு பணியாளர்கள் மன்னாரில் போராட்டம்



(மன்னார்)

மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்கள் மற்றும்சாரதிகள் இணைந்து நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த கழிவு அகற்றும் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக தடைப்பட்டுள்ளது. உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படாமையால் குறித்த கழிவு அகற்றும் நடவடிக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் நகர சபையின் சுத்திகரிப்பு பணிக்கு தேவையான எரிபொருளை வழங்கக் கோரி குறித்த போராட்டம் இடம்பெற்றது.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட நகர சபையின் சுத்திகரிப்பு பணியாளர்கள் மற்றும் சாரதிகள் உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதார சேவைகளை தரம் தாழ்த்தி பார்ப்பது ஏன்?, திண்மக் கழிவகற்றல் சேவை அத்தியாவசிய சேவை என்று தெரியாதா? உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார். இந் நிலையில் குறித்த போராட்டம் முடிவுக்கு வந்தது. (நி-6-285)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி பதவி விலகாவிட்டால் தொடர் போராட்டத்தில் குதிப்போம்

## தேரர் அமைப்புகளின் ஒன்றியம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நாட்டை மேலும் அராஜக நிலைக்கு ஆளாக்காமல் நாளை மறுதினம் 7 ஆம் திகதிக்குள் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வேண்டும். இல்லாவிட்டால் அனைத்து தேரர்களையும் கொழும்புக்கு அழைத்து வந்து தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என தேரர் அமைப்புகளின் ஒன்றியம் எச்சரித்துள்ளது.**



தேரர்கள் அமைப்புகளின் ஒன்றியத்தின் 11 தேரர்கள் கைச்சாத்திட்டு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டை தொடர்ந்து அராஜக நிலைக்குக் கொண்டு செல்லாமல் நாளை மறுதினம் 7 ஆம் திகதிக்குள் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வேண்டும்.

பௌத்த மக்களின் வாக்குகளின் மூலம் அதிகாரத்துக்கு வந்து மக்களுக்கு சேவை செய்வதாக ருவன்வெலிசாய புனித பூமியிலும் ஸ்ரீமஹா புத்த பெருமான் நிலைகொண்டுள்ள புனித பூமியிலும் சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு ஜனாதிபதி மக்களை ஏமாற்றி இருக்கின்றார் என்பது அவர், மஹாநாயக்க தேரர்களின் கடிதத்துக்கு பதில் அளிக்காததன் மூலம் தெரிய வருகின்றது.

கோட்டாபய ராஜபக்ஷவை தொடர்ந்தும் ஜனாதிபதியாக ஏற்றுக் கொள்ள தேரர்கள் உட்பட நாட்டு மக்கள் தயாரில்லை.

மேலும் நாடு பாரிய அழிவொன்றைக் காணும் நிலையில் இருக்கும்போது, அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காத நிலையில் 22 மில்லியன் மக்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு மக்களின் சார்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியது தேரர்களின் பிரதான கடமை என்பதாலே இந்தக் கோரிக்கையை விடுக்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சுயமாகவே நாடு முடங்கியுள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச



(கொழும்பு)

நாட்டில் தற்போது எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சுயமாக ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று திங்கட்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

"மக்கள் கடுமையான அடக்குமுறையால் அவதிப்படுகிறார்கள். ஜனாதிபதி இருப்பது கண்ணுக்குத் தெரியவில்லை.

எதிர்க்கட்சியில் இருந்ததில் எங்களுக்கு மகிழ்ச்சி இல்லை.

துரதிர்ஷ்டவசமாக இந்த ஆட்சியில் சர்வதேச சமூகத்திற்கு நம்பிக்கை இல்லை.

சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவி, நாட்டின் நம்பிக்கையையும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையையும் பெறுவதற்கான வேலைத்திட்டத்திற்கு செல்ல வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# கட்டுநாயக்கவில் இந்தியர்கள் இருவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரு இந்திய பிரஜைகளை கைது செய்துள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த இருவரும் நாட்டுக்கு 19 கோடி ரூபாய் பெறுமதியான தங்கம் மற்றும் வெளிநாட்டுப் பணத்துடன் வருகை தந்த நிலையிலேயே அவர்களை கைது செய்துள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். இரு இந்தியப் பிரஜைகளையும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சுங்கப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 200 | 350 |
| உருளைக்கிழங்கு | 190 | 200 | 250 | 220 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 400 |
| தக்காளி | 600 | 250 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 200 | 160 |
| கோவா | 280 | 300 | 320 | 350 |
| கரட் | 200 | 330 | 350 | 400 |
| பூசணி | 200 | 180 | 240 | 220 |
| புடோல் | 160 | 140 | 160 | 200 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 200-500 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 200 | 220 |
| பாகற்காய் | 350 | 300 | 450 | 500 |
| வெண்டிக்காய் | 160 | 150 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 240 | 240 |
| பயற்றங்காய் | 350 | 250 | 250 | 250 |
| லீக்ஸ் | 200 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 350 | 300 | 250 | 350 |
| கறிமிளகாய் | 400 | 350 | 480 | 600 |
| முருங்கைக்காய் | 450 | 350 | 400 | 300 |
| போஞ்சி | 400 | 500 | 350 | 450 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | — | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 50 | 80 | 80 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 380 | 400 | 400 | 400 |
| முள்ளங்கி | 160 | 120 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | — | 150 | — | 120 |

# கோட்டாவை வீட்டிற்கு அனுப்ப அனைவரும் ஓரணியில் திரள்வோம்

## சம்பிக்க அழைப்பு



(கொழும்பு)


தற்போதைய நாட்டு நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகா விட்டால் நாட்டில் நெருக்கடி நிலை அதிகரிக்கும் என்று 43 ஆம் படையணியின் பொதுச் செயலாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அத்துடன், நாமல் ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். ராஜபக்ஷ தரப்புக்கு தற்போது 69 இலட்சம் பேரின் ஆதரவு இல்லை. 3 வீதமான மக்கள் கூட அவர்களுடன் இல்லை. எனவே, ஜனாதிபதி பதவி விலக வேண்டும்.

அவ்வாறு அவர் பதவி விலகி 24 மணி நேரத்துக்குள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாய்ப்பை பாராளுமன்றத்துக்கு வழங்க வேண்டும் எனவும் சம்பிக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக அனைத்து எதிரணிகளும் இதற்காக ஓரணியில் திரள வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## கல் மனம் கரைந்ததே!

(நேற்றைய தொடர்ச்சி)

பல்லூகன் அவனை தன் உள்ளங்கையில் எடுத்துக் கொண்டு கிளம்பிச் சென்றான். ஓரிடத்தில் ஒரு கால் வாய் அடுப்பின் மீது கல்லாலான குழிவான பெரிய சட்டி வைக்கப்பட்டிருந்தது. அதில் எண்ணெய் "தள தள வெனக் கொதித்துக் கொண்டிருந்தது.

பல்லூகன் அதை ஜெயசேனனுக்குக் காட்டி "மறுபடியும் நன்றாக யோசி. உன்னால் இதில் குளிக்க முடியுமா?" என்று கேட்டான். அவனோ "நான் தான் சந்திரிகாவை அடைய எதையும் செய்யத் தயார் என்று சொல்லி விட்டேனே. இதைப் போல ஆயிரம் எண்ணெய்க் கொப்பறைகளில் மூழ்கிக் குளிக்க வேண்டும் என்றாலும் அதற்குத் தயார்" என்றான். ராட்சஸன்



அவனைப் பொத்தென்று அதனுள் போட்டான். அதில் விழுந்த ஜெயசேனனின் உடல் பொரிந்து போயிற்று. அவன் ஆவென அலறினான். அவன் குறுகிய மிளகாய் வத்தல் போலாகி எண்ணெயின் மேல் மட்டத்தில் மிதந்தான்.

அப்போது பல்லூகன் ஏதே ஒரு மந்திரத்தை உச்சரிக்கவே கால்வாய் அடுப்பு, கல் சட்டி எல்லாம் மறைந்து போயின. ஜெயசேனன் முன் போலாகி ராட்சஸன் முன் இருந்தான்.

பல்லூகன் திருப்தி அடைந்தவனாக "நீ இறக்கவில்லை. ஆனால் இந்த மாதிரிக் குளியல் நீ மூன்று நாள் தொடர்ந்து செய்தாலே நீ சந்திரிகாவை அடையும் வழியைச் சொல்வேன், சம்மதமா?" எனக் கேட்டான். ஜெயசேனனும் "என் சந்திரிகாவை அடைய மூன்று தடவை என்ன முப்பதாயிரம் தடவை கூட இப்படிக் குளிக்க நான் தயார்" என்றான். அதைக் கேட்ட பல்லூகன் "சபாஷ்! இதுவரை எந்த அரசகுமாரனும் செய்யாத செயலை நீ செய்திருக்கிறாய். உன் ஆசை இவ்வளவு புனிதமானதா! சரி நான் உனக்கு இப்போது சந்திரிகா எப்படிக் கிடைப்பாள் என்று கூறிகிறேன். கவனமாகக் கேள்" என்றான்.

ஜெயசேனனும் பல்லூகன் சொல்வதை கேட்கலானான். பல்லூகனும் "இந்தக் காட்டில் வேறொரு இடத்தில் முள்ளுகி என்னும் ராட்சஸி இருக்கிறாள். அவள் பலத்திலும் சரி சக்தியிலும் சரி எனக்குச் சமமானவள். அவளிடம் மந்திரக் குங்குமம் இருக்கிறது. அதை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தால் நான் சந்திரிகாவை உன்னிடம் ஒப்படைப்பேன்" என்றான். (தொடரும்)

# சிலப்பதிகாரம்

## அவசியமான முன் குறிப்பு

தமிழின் தொன்மைக்குச் சான்றாக விளங்கும் இலக்கியங்களுள் ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை மிக முக்கியமானவை.

இந்த ஐந்து காப்பியங்களுள் வளையாபதியும் குண்டலகேசியும் இன்று நமக்கு முழுமையாகக் கிடைப்பதில்லை. இரண்டிலும் மிகச்சில பாடல்கள் மட்டுமே நமக்கு வாசிக்கக் கிடைக்கின்றன. கிடைக்கிற பாடல்களை வைத்து இந்தக் காப்பியங்கள் எதை, யாரைப் பற்றிப் பேசுகின்றன என்று அறுதியிடுவது சிரமம். ஆனால் சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை மூன்றும் நமக்கு முழுமையாகக் கிடைக்கின்றன. கதை வளமும் காவியச் சுவையும் கவித்துவ எழிலும் மிக்க இந்த அற்புதமான இலக்கியங்களுக்கு நல்ல தமிழ் உரைகளும் இருக்கின்றன.




ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்றைய வாசகர்கள் வாசித்து, பொருள் புரிந்து காப்பியத்தை ரசிக்கச் செய்யக்கூடிய விதத்தில் அவை இல்லை. பண்டித மொழி அல்லது பாடப்புத்தக மொழியில் எழுதப்பட்டிருக்கும் உரை நூல்களைத் தற்கால வாசகர்கள் அநேகமாகத் தொடுவதே இல்லை.

உரை நூல்களின் தன்மையால் இப்பேரிலக்கியங்கள் சமகால எதிர்கால வாசகர்களுக்குக் கிட்டாமலேயே போய் விடக் கூடாது என்று கிழக்கு பதிப்பகம் தீவிரமாகக் கருதியதன் விளைவுதான் நாவல் வடிவில் காப்பியங்கள் என்னும் புதிய திட்டம். காப்பியங்களின் மூல ஆசிரியர்கள் எழுதியிருப்பதற்கு மேல் இம்மியும் இந்நாவல் வடிவில் இருக்காது. அதேசமயம் தற்காலத் தமிழ் உரை நடையின் சகல சாத்தியங்களையும் பயன்படுத்தி, வாசிப்பை எளிமையான, ரசமான, விறுவிறுப்பான அனுபவமாக மாற்றும் ரசவாதத்தை இதில் எழுத்தாளர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். தற்கால நாவல் ஒன்றை வாசிப்பது போலவே நீங்கள் இக்காப்பியத்தை வாசிக்க இயலும், ரசிக்க இயலும், கதையின் தன்மையை, போக்கை, கட்டுக்கோப்பை உள்வாங்கிக் கொள்ள இயலும். இதனை முற்றிலும் ரசித்து வியந்த பிறகு நிச்சயமாக மூல நூலை வாசிக்கும் வேட்கை உங்களை ஆட்கொள்ளும் என்று உறுதியாக நம்புகிறோம்.

நமது புராதனமான இலக்கியங்களைக் கட்டிக் காப்பது மட்டுமல்ல காலம் தோறும் தோன்றும் புதிய வாசகர்களுக்கு அவற்றைக் கடத்திச் செல்ல வேண்டியதும் நமது கடமை என்று நம்புகிறது. அதற்கான முதல் படியாக இம் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

சாகாவரம் பெற்ற காப்பியங்களை முதலில் நாவல் வடிவத்தில் சுவாரசியமாகப் படியுங்கள். பிறகு மூல நூலைத் தேடிச் செல்லுங்கள். தமிழ் என்றுமுள தமிழாக விளங்குவதற்கு நாம் செய்யக்கூடிய எளிய கடமை இதுவே.

பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்று செய்யப்போகும் காரியத்தில்
மட்டும் முனைப்பாயிருங்கள்.
- மார்க்கஸ் அரேலியஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அனைத்து எதிர்க்கட்சிகளும் அணிதிரள வேண்டும்!

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியில் இருந்து விலக்கினால் மட்டுமே உலக நாடுகள் இலங்கைக்கு உதவும் என்று கூறுமளவிலேயே எதிர்க்கட்சிகளின் வல்லமை இருக்கின்றது.**

அதாவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அறிக்கை விடுவது மட்டுமே எதிர்க்கட்சிகளின் பணியாக இருந்தால், கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருப்பதை எவரால் எதுவும் செய்ய முடியாது.

மாறாக, கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலக்க வேண்டுமாயின், அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒரு பொதுநோக்கில் திட்டங்களைத் தீட்டி, மக்களை ஒன்றுபடுத்திப் பெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

பெருமெடுப்பில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுமாயின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியில் இருந்து நிச்சயம் விடைபெறுவார்.

ஆனால் அதனைச் செய்வதற்கு எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமை இல்லை.

ஆம், ஜனாதிபதிப் பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷவை நீக்க வேண்டும் என்ற இலக்குக்கு அப்பால், கோட்டா பதவி விலகினால் அந்தப் பதவியை நான் கைப்பற்ற வேண்டும் என்ற உள்நோக்கம் எதிர்க்கட்சிகளிடம் இருப்பதாலேயே அவர்களால் இன்று வரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை எதுவும் செய்ய முடியாமல் உள்ளது.

உண்மை, கோட்டாபய ராஜபக்ஷவை பதவி நீக்கம் செய்ய வேண்டுமாயினும் அந்தப் பதவி எனக்குக் கிடைக்காமல் இன்னொருவருக்குக் கிடைக்குமாக இருந்தால், கோட்டாவே தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்கட்டும் என்று நினைக்கும் அளவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் இருக்கின்றனர்.

இந்த நிலைமை நீடிக்கும்வரை இந்த நாட்டின் அவல நிலை தொடரவே செய்யும்.

எனவே முதலில் எதிர்க்கட்சிகள் தமக்குள் ஒன்றுபட வேண்டும்.

நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதே தம்து நோக்கு என்ற உன்னதமான இலக்கோடு பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

அந்தப் பயணம் இலக்கை அடையும்போது மக்கள் நாட்டுக்குப் பொருத்தமான தலைவரைத் தெரிவு செய்வர்.

ஆக, எதிர்க்கட்சிகள் ஆளுக்கு ஆள் கன்னை பிரிந்து தத்தம் கடமைக்கு அறிக்கை விட்டுக் கொண்டிருந்தால் ஆகப்போவது எதுவுமில்லை.

எனவே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போன்றவர்களைத் தலைவர்களாகக் கொண்டு எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஓரணியாகச் செயற்பட வேண்டும்.

இதுவே இன்றைய உடனடித் தேவையாகும்.

# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் - படைத்தரப்பு மோதிக்கொள்வதை தவிர்க்க அறிவுறுத்தல் வழங்கவேண்டும்

## ஜனாதிபதிக்கு சட்டத்தரணிகள் சம்மேளனம் கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் பல பாகங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்களுடன் படைத்தரப்பினர் மோதிக்கொள்வதை தவிர்க்கும் வகையில் பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அறிவுறுத்தல்களை வழங்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் நிலையங்களில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைப் புரிந்து கொள்வது அவசியம். அதே நேரம் பொலிஸாரும் ஆயுதப்படையினரும் மிகவும் கடினமான சூழ்நிலையில் செயற்படுகின்றனர்.

எனினும், பொது மக்களுடன் வன்முறையை தவிர்த்து மிகவும் நிதானத்துடன் செயற்படுமாறு பொலிஸாரிற்கும் படையினருக்கும் கடுமையான அறிவுறுத்தல்களை வழங்குவது அவசியமாகும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளனம் ஜனாதிபதிக்கான தமது கடிதத்தில் கோரியுள்ளது.

அத்தகைய வன்முறைக்கு பொது மக்களை உட்படுத்தும் தவறான அதிகாரிகளைக் கையாள்வதற்கு சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சம்மேளனம் கேட்டுள்ளது.

இலங்கையின் பொலிஸாரினால் முக்கியமாக நிர்வகிக்கப்பட வேண்டிய விடயங்களில், படையினரை ஈடுபடுத்துவது பொருத்தமானதல்ல என்றும் சட்டத்தரணிகள் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் கடந்த வாரம் காலியில் மேற்கொள்ளப்பட்டதை போன்று, அமைதியான போராட்டங்களுக்கு இடையூறு விளைவிக்கவோ அல்லது தடுக்கவோ ஆயுதப் படைகளைப் பயன்படுத்தக் கூடாது என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளனம் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளது.

இல்லையெனில், எதிர்பாராத குழப்ப நிலையையும் அமைதியின்மையையும் தடுக்க முடியாது என்றும் சட்டத்தரணிகள் சம்மேளனம் எச்சரித்துள்ளது. (ம-7)

## பாதாள உலக சந்தேகநபர் சுட்டுப் படுகொலை

புறக்கோட்டை - பெஸ்டியன் மாவத்தை தனியார் பஸ் நிலையத்தின் நுழைவாயில் அருகே, முன்னாள் இராணுவ வீரர் ஒருவருக்கு மரணத்தை ஏற்படுத்திய துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில், துப்பாக்கிதாரியாக செயற்பட்டதாக கூறப்படும் பாதாள உலக சந்தேகநபர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டம் யக்கல - பெம்முல்ல பகுதியில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் முன்னெடுத்த துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் உயிரிழந்ததாகவும் எல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 41 வயதான இஹல வித்தானகே ஜோசப் குமார் எனும் நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.(ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் கிழமை 06 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** நெபாட் வலைத் தொழிற்சாலை, ஸ்ரீ லங்கா ஐஸ் தொழிற்சாலை, ATI Gurunagar, Building Department, Beach Road, சீனோர் குருநகர், ஐஸ் தொழிற்சாலை கடற்கரை வீதி, அரியாலை கிழக்கு, நாவடி அரியாலை கிழக்கு, பூம்புகார் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** உயிர்த்தரசங்குளம், எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம், கடற்படை முகாம்- ஓலைத் தொடுவாய், பெரிய கரைசல் பல் மீரா ஹவுஸ், பல் மிரா ஹவுஸ்- தலைமன்னார், தப்ரோபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி, தலை மன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காளைப்பாடு, சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, இளைஞர் படைப்பயிற்சி மையம், பேசாலை-ஐஸ் தொழிற்சாலை எருக்கலம்பிட்டி, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி 4 ஆவது மைல் கல், ஜோசப்வாஸ் நகர், கட்டுக்காரம் குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியம் குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடிச் சந்தி, ஓலைத் தொடுவாய், படப்பாடி நீர்வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, சணி கிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்புத் திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தோட்டவெளி, துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், மறக்கறம்பளை- கணேசபுரம் குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனம் ஒரு குளம் போன்றது

❖ மனதை ஒரு குளத்திற்கு ஒப்பிடலாம். அதில் எழுகின்ற அலை மற்றும் சிற்றலை ஒவ்வொன்றும் அடங்கும்போது முற்றிலுமாக அழிந்து விடுவதில்லை. மீண்டும் அந்த அலை திரும்பி வருவதற்கான அறிகுறியோடு கூடிய அடையாளத்தை விட்டுச் செல்கின்றது.

❖ இவ்வாறு அலை மீண்டும் எழுவதற்கான சாத்தியக் கூறான அடையாளமே "சம்ஸ்காரம்" என்று அழைக்கப்படுகின்றது.

❖ நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் நம் உடம்பின் ஒவ்வொரு அசைவும் நம் நினைக்கின்ற ஒவ்வொரு நினைவும் சித்தத்தின் ஒரு பகுதியை விட்டுச் செல்கின்றது. இந்தப் பதிவுகள் மேற்பரப்பின் தென்படாமல் இருக்கலாம். ஆனாலும் ஆழ்மனதில் நாம் அறியாமலேயே செயல்புரியும் அளவு வல்லமை படைத்தவை. ஒவ்வொரு கணமும் நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை மனதில் உள்ள இந்தப் பதிவுகளின் மொத்தமே உருவாக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 23

ஸ்டாலினின் மரணத்திற்குப் பிறகு, உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளராக இருந்த மெல்னிகோவ் நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக ஒலெக்ஸி கைரிசென்கோ நியமிக்கப்பட்டார். அவர் அப்பதவியை நிரப்பிய இரண்டாவது உக்ரைனியர் ஆவார். இது கட்சி மற்றும் அரசாங்கத்தில் உள்ள பணியாளர்களில் மாற்றங் களை ஏற்படுத்தியதோடு மன உறுதியையும் நம்பிக்கையையும் அதிகரித்தது. குறிப்பாக அவர்களின் திறமையினை படிப்படியாக அதிகரித்தது.

ரஷ்யாவுடன் உக்ரைன் "மீண்டும் ஒன்றிணைந்த" 300 ஆவது ஆண்டு விழாவின் 1954 இல் யூனியன் தழுவிய கொண்டாட்டங்கள் உக்ரைனியர்களின் உயர் அந்தஸ்தின் மற்றொரு அறிகுறியாக இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில், கிரிமியன் தீபகற்பம், சோவியத் ரஷ்யாவிலிருந்து சோவியத் உக்ரைனுக்கு மாற்றப்பட்டது. (குறிப்பு- Pereyaslav ஒப்பந்தத்தின் பிரகாரம் உக்ரைனில் இருந்த கோசாக் (Cossack) இராணுவத்தினர் 1654 இல் உக்ரைனை ரஷ்யாவிடம் ஒப்படைத்தனர். )

இக் காலகட்டத்தில் உக்ரைனிய கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகள் அதிகாரத்தின் நெம்புகோல்களுக்கு நெருக்கமான மொஸ்கோவில் உள்ள மத்திய கட்சி உறுப்புகளுக்கு பதவி உயர்வுகளைப் பெறத் தொடங்கினர். கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையில் நிலையான விரிவாக்கம் இருந்தது. 1958 இன் இறுதியில் ஒரு மில்லியனைத் தாண்டியது. அவர்களில் 60.3 சதவீதம் உக்ரைனியர்கள் மற்றும் 28.2 சதவீதம் ரஷ்யர்கள் 40 வீதத்திற்கும் அதிகமானோர் போருக்குப் பின்னர் கட்சியில் இணைந்தவர்கள் ஆவர்.

குருசேவ் அரசாங்க நிர்வாகம் மற்றும் பொருளாதார நிர்வாகத்தில் வரையறுக்கப்பட்ட பரவலாக்கத்தையும் அறிமுகப்படுத்தியது. இந்த நடவடிக்கைகள் அதிகாரங்களை மேம்படுத்தியது மற்றும் உக்ரைனிய கட்சி மற்றும் அரசாங்கத் தலைவர்கள் மற்றும் அதிகாரத்துவத்தின் அபிலாஷைகளைத் தூண்டியது. மேலும் இது மொஸ்கோவில் இருந்து "உள்ளூர் வாதத்திற்கு" எதிரான எச்சரிக்கைகளை வெளிப்படுத்தியது.

**உக்ரைனில் குருசேவ் அரசாங்க நிர்வாகம் மற்றும் பொருளாதார நிர்வாகத்தில் வரையறுக்கப்பட்ட பரவலாக்கத்தையும் அறிமுகப்படுத்தியது.1955-56 இல் ஒரு பொதுமன்னிப்பு மூலம் பெரும்பாலான வதை முகாம் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். வெளியிலிருந்து பல இலட்சம் பேர் உக்ரைனுக்குத் திரும்பினர்.**

சோவியத் யூனியனின் பெரும் வளர்ச்சி கொண்ட பகுதியாக உக்ரைன் உருவெடுத்தது. சோவியத் யூனியனின் மொத்த பட்ஜெட்டில் 20 சதவீதம் உக்ரைன் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. சோவியத் யூனியனின் முக்கிய தொழில் கேந்திரமாக உக்ரைன் மாறியது. சோவியத் யூனியனின் முக்கிய ஆயுத தளவாட நிறுவனாங்கள், விண்வெளி ஆய்வு மையங்கள் உக்ரைனில் நிறுவப்பட்டன.

உக்ரைனில் பொருளாதார மீட்சி தொடர்ந்தது. இது காலப்போக்கில் குறைந்தாலும்-தொழில் வளர்ச்சி விகிதங்கள். நுகர்வோர் பொருட்களை வழங்குவதில் சில சலுகைகள் அளிக்கப்பட்டன. எவ்வாறாயினும், உற்பத்தியை அதிகரிக்க கூட்டுப் பண்ணைகளின் நிர்வாகத்தில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், விவசாயம் பின்தங்கியேயிருந்தது.

1953 வாக்கில் பயங்கரவாதம் தணிந்தது, ஆனால் அடக்குமுறை மிகவும் பாரபட்சமாக பயன்படுத்தப்பட்டது. 1955-56 இல் ஒரு பொது மன்னிப்பு மூலம் பெரும்பாலான வதை முகாம் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். மேலும் பல இலட்சம் பேர் உக்ரைனுக்குத் திரும்பினர். இருப்பினும் பல அரசியல் கைதிகள் நீண்ட தண்டனையை அனுபவித்தனர். ஸ்டாலினின் ஆட்சியில் பாதிக்கப்பட்ட எழுத்தாளர்கள் பாராட்டும் மரியாதையும் பெற்றனர். 1920கள் மற்றும் 30களில் இருந்து கண்டிக்கப்பட்ட நபர்களுக்கு தகுதியான மறுவாழ்வு நீட்டிக்கப்பட்டது.

1930 களில் இருந்து உக்ரைனிய வரலாற்றிற்கு அர்ப்பணிக்கப்பட்ட முதல் இதழ் உட்பட தடைசெய்யப்பட்ட சில இலக்கியப் படைப்புகள் மீண்டும் வெளியிடப்பட்டன, மேலும் பல புதிய இதழ்கள் தோன்றின.

## உக்ரைன் விரிவாக்கம்

1240 இல் பது கானால் கீவ் அழிக்கப்பட்ட பிறகு, டினீப்பர் ஆற்றுக்கு அப்பால் இருந்த நிலம் மஸ்கோவி இராச்சியம், டாடர் கானேட் மற்றும் போலந்து-லிதுவேனியன் இராச்சியம் ஆகியவற்றால் சர்ச்சைக்குரிய நிலமாக மாறியது. இந்த பிராந்தியத்தில்தான் உக்ரைனிய மக்களின் அரசியல் வாழ்க்கை தொடங்குகிறது. ஏனெனில் கோசாக்ஸ் என்று வரலாற்றில் அறியப்பட்ட குடியேறிகள் தங்கள் பாரம்பரிய மரபுவழி கிறிஸ்தவ நம்பிக்கையைப் பாதுகாக்கும் அதே வேளையில் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்க முயன்றனர். அவர்களிடையே எழுந்த ஆரம்பகால வேறுபாடுகளில் ஒன்று, டினீப்பர் ஆற்றின் மேற்கில் மற்றும் கிழக்கில் குடியேறியவர்களுக்கு இடையேயான புவியியல் வேறுபாடு ஆகும். ஆற்றின் மேற்கில் குடியேறியவர்களுக்கு வலது கரை என்றும், ஆற்றின் கிழக்கில் குடியேறியவர்களுக்கு, இடது கரை என்றும் அறியப்பட்டது.

இப் பகுதியைத்தான் 1654 இற்கு முன் உக்ரைன் பகுதி என்று படத்தில் (படம்-1 இலக்கம்-1) காட்டப்பட்டுள்ளது. அது பெரிய பிரதேசமாக இருக்கவில்லை. 1654 -1917 ஆண்டுகளுக்கிடையில் ரஷ்ய மன்னர்களினால் பல பிரதேசங்கள் உக்ரைனுக்கு பரிசுகளாக வழங்கப்பட்டன. 1922 இல் நோவோரோசியா பகுதி லெனினால் உக்ரைனுக்கு வழங்கப்பட்டது.

கிழக்கு கலீசியா 1939-1940 காலத்தில் மொலோடோவ்-ரிப்பன்ட்ராப் ஒப்பந்தத்தின்படி சோவியத் ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டு அப்பகுதி ஸ்டாலினினால் உக்ரைனுக்கு வழங்கப்பட்டது. வடக்கு புகோவினா மற்றும் தெற்குப்பகுதி 1940 இல் சோவியத் ஒன்றியத்தால் கைப்பற்றப்பட்டு அது உக்ரைனுடன் சேர்க்கப்பட்டது. டிரான்ஸ்கார்பதியா பிரதேசம் 1945 இல் செக்கோஸ் லோவாக்கியாவில் இருந்து எடுக்கப்பட்டது உக்ரைனுடன் சேர்க்கப்பட்டது. 1954 இல் கிரிமியா - குருஷ் சேவினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இவையெல்லாம் அடங்கிய பிரதேசமே தற்போதைய உக்ரைன் ஆகும்.

குருஷ்சேவின் ஆட்சியின் பிற்பகுதியில், ரஷ்யாமயமாக்கல நடவடிக்கையில் ஒரு தனித்துவமான போக்கு மீண்டும் தோன்றியது. 1959 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கல்விச் சீர்திருத்தம்பள்ளிகளில்உக்ரைனியமொழியயிற்றுவிப்பைக் குறைக்கும் ஒரு நீண்ட செயல் முறையைத் தொடங்கியது.

1961 ஆம் ஆண்டில், கட்சியின் புதிய திட்டம் சோவியத் மக்களின் ஒருங்கிணைப்புக்கு ரஷ்ய மொழியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. மேலும் சோவியத் குடியரசுகளுக்கு இடையிலான எல்லைகளில் ரஷ்ய மொழிப் பேச்சு வழக்கு முக்கியத்துவம் குறைவதைப் பற்றி குறிபிட்டுள்ளது. சோவியத் சமூகம் கம்யூனிசத்தை நோக்கி முன்னேறும் போது மற்றைய தேசிய மொழிகள் மறைந்துவிடும் இதன் மூலம் "தேசங்களின் இணைவு" கோட்பாடு என்ற எண்ணத்தை கட்சி கோட்பாட்டாளர்கள் உருவாக்கினர்.

இதனால் 1950 களின் பிற்பகுதியில் சிறிய, இரகசிய அதிருப்தி குழுக்கள் உக்ரைனில் உருவாகத் தொடங்கின, இது முதன்மையாக உக்ரைனிய அரசியல் மற்றும் கலாசார மாற்றுகள் பற்றிய விவாத சூழலை தோற்றுவித்தது.







1954 இல் உக்ரைன் ரஷ்யாவுடன் இணைந்ததன் 300வது ஆண்டு நினைவாக முத்திரை

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தண்ணீர் வாளிக்...

குறித்த குழந்தை வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தவேளையில், அருகில் இருந்த 20 லீட்டர் கொள்வனவு உடைய தண்ணீர் வாளிக்குள் இருந்த கரண்டி ஒன்றினை எடுக்க முற்பட்ட வேளை, வாளிக்குள் தலைகீழாக விழுந்து நீரில் மூழ்கியுள்ளது.

அதை அவதானித்த வீட்டார் குழந்தையை மீட்டு மூளாய் வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் வைத்தியசாலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை வலிகாமம் கிழக்கு மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,18,33,104)

## வவு. செட்டிகுளத்...

பயணித்துக்கொண்டிருந்த ரயில் வவுனியா செட்டிகுளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் காந்திநகர் பகுதியைச் சேர்ந்த ருக்சன் (வயது-33) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். (ம-7,299)

## மக்களுக்கு எரி...

மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தினை நேற்று திங்கட்கிழமை யாழ். ஆயர் இல்லத்தில் உத்தியோகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் யாழ். ஆயர் கருத்துத் தெரிவித்த போது, தற்பொழுது யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள்.

ஆனபடியினால் இயன்ற அளவு அரச அதிபரோடு இணைந்து அவரின் கீழ் எரிபொருளை பொதுமக்களுக்கு பகிர்ந்தளிப்புக்குரிய ஒழுங்கமைப்பினை மேற்கொண்டுள்ளோம்.

மேலும் வடபகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி எதுவும் எமக்கு கிடைக்கவில்லை. இருந்தும் வறிய குடும்பங்களுக்கான உதவிகளை செய்து கொண்டிருக்கின்றோம்.

அத்தோடு எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. கொழும்பு மற்றும் தூர இடங்களுக்குப் போய்வருவது கஷ்டமாகவுள்ளது.

முக்கியமாக சுகாதாரப் பிரிவினருக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பினையும் கொடுக்க தயாராக இருக்கின்றோம். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுடைய பணியினை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு இராணுவம் ஒத்துழைப்பினை வழங்கும் என யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி தன்னிடம் தெரிவித்ததாக யாழ். ஆயர் தெரிவித்தார். (ம-7,33)



















## இலங்கைக்கு...

நேற்று பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பில் டேவிட் ஹோலி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினை குறித்து அவுஸ்திரேலியா நன்கு அறிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனி நாடொன்று இலங்கைக்கு வழங்கிய மனிதாபிமான உதவிகளில் அதிகூடிய தொகையை அந்நாட்டினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## அரச ஊழியர்க...

யும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இதற்கு முன்பு 30 இலட்சமாக இருந்த வருமான வரி வரம்பை 5 இலட்சமாக குறைக்க நிதி நிதியம் முன்மொழிந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (ம-7)

## நிவாரண விலை..

அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு இடமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். இந்த முறை சிறுபோகத்தில் சிறந்த நெல் அறுவடை கிடைக்கப்பெறும்.

எதிர்வரும் பெரும்போகத்திலும் சிறந்த அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை நிவாரண விலையில் வழங்குவதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவ்வாறான பொருட்கள் தற்சமயம் சதோச விற்பனை நிலையத்தின் ஊடாக விநியோகிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## திருக்கேதீச்சர..

கலைப்பொக்கிஷமாகவும் இந்திய அரசின் பூரண அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீச்சர கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வடக்கில் இருந்தும் சிறப்பு போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## யாழில் எரிபொ...

தாக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் எரிபொருள் விநியோகம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையத்தினர், இராணுவத்தினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது நீண்ட நாட்களாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு எவ்வாறு எரிபொருட்களை விநியோகிப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், இனிவரும் காலங்களில் வரும் எரிபொருளை எவ்வாறு விநியோகிப்பது என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பொதுமக்களுக்கு 72 சதவீத எரிபொருள்களை விநியோகிப்பதாகவும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கு 28சதவீதஎரிபொருளைவிநியோகிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.

6600 லீற்றர் கொள்கலன் கொள்வனவு உள்ள பவுசரில் 1250 மோட்டார் சைக்கிளுக்கும் 500 முச்சக்கர வண்டிகள், கார் உள்ளிட்ட வாகனங்களுக்கு பொதுப்பயன்பாட்டில் உள்ள வாடிக்கையாளர்களும் அரசசேவையில் உள்ள அத்தியாவசிய சேவையாளர்களில் 600 மோட்டார் சைக்கிள்களுக்கும் 50 கார் வாகனங்களுக்கும் பெற்றோல் பகிர்ந்தளிக்கப்படும் என யாழ். மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தினர் மற்றும் இராணுவத்தினரின் உத்தரவுகளை கேட்காமல் இனி எரிபொருள் விநியோகிப்போம் என யாழில் உள்ள ஐஓசி நிறுவனத்தினர் நேற்று அறிவித்த நிலையிலேயே மேற்படி கூட்டம் இடம்பெற்றது.

இதேவேளை எரிபொருள் பங்கீட்டை நேர்த்தியாக செய்யும் பொருட்டு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபனின் வழிப்படுத்தலில் செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து யாழ். செயலகத்தில் இரவு வேளையிலும் எரிபொருள் வழங்கலுக்கான ஒழுங்கு முறைகளை செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## இந்திய...

இந்திய மீனவர்கள் 5 பேர் ஒரு படகுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்பரப்பில் வைத்து நேற்று மாலை கடற்படையினரால் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். மேலும் இந்தியப் படகு மயிலிட்டி துறை முகத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளது. (ம-7)

## முற்றுகையிட்ட...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அருகில் சுற்றி வளைத்து போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து இவ்வாறு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.


பொலிஸார் அங்கு பலத்த பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளதுடன், வீதித் தடைகளையும் அமைத்துள்ளனர். இதனால் குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பிய வண்ணம், பதாதைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சமடைய வேண்டாம்

## பாதுகாப்பு அமைச்சு

பயங்கரவாத தாக்குதல் ஒன்றோ அல்லது நாசகார செயல் ஒன்றோ இடம்பெறலாம் என பொலிஸ்மா அதிபர் பாதுகாப்பு செயலாளருக்கு அறிவித்துள்ள கடிதம் ஒன்று பரவலாக பகி ரப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பில் மக்கள் வீணாக அச்சமடையத் தேவையில்லை என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ம-7)

# ரூ.10 ஆயிரத்துக்கு 1 மூட்டை யூரியா

## அடுத்த வாரம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்

(கொழும்பு)

இந்தியாவிடம் இருந்து கிடைக்கப் பெறும் யூரியா மூட்டையொன்றின் விலையை பத்தாயிரம் ரூபாய்க்கு அடுத்த வாரம் முதல் சகல விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தற்சமயம் யூரியா மூட்டையொன்றின் விலை 42 ஆயிரம் என்ற அதிக விலையில் சந்தையில் விற்பனையாகிறது. இந்தியாவிடம் இருந்து கிடைக்கப்பெறும் உரத்தை விவசாயப் பிரதிநிதிகளின் இணக்கத்துடன் பத்தாயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

65 ஆயிரம் மெற்றிக்தொன்னை ஏற்றிய கப்பல் இலங்கை நோக்கி தம்து பயணத்தை ஆரம்பித்துள்ளது. இந்தக் கப்பல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இரவு நாட்டை வந்தடையவுள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையில் இருந்து உரத்தை விநியோகிக்க முடியும் என அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

பாண் சாப்பிட்டுக் கொண்டிருந்த

# வயோதிப மாது

## மயங்கி விழுந்து மரணம்

(கரணவாய்)

பாண் சாப்பிட்டுக் கொண்டிருந்த வயோதிப மாது ஒருவர் மயங்கி விழுந்து மரணம் அடைந்துள்ளார்.

இச்சம்பவம் நாகர்கோவில் கிழக்குப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு மரணம் அடைந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த தவபாக்கியம் சிவஞானசுந்தரம் (வயது- 72) என்பவராவார்.

காலையில் பாணை உணவாக உட்கொண்டிருந்த நிலையில் மயங்கி சரிந்த அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தபோது அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)


## மணமகள் தேவை

பதிவு இல:-FIN/BR/1139

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் உள்ள (PR உண்டு) 1985 இல் பிறந்த குற்றம் இல்லாத ரேவதி நட்சத்திரம் உடைய டிவோஸ் பட்டதாரி மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.


(12069)

அன்பு திருமண சேவை

உள்ளூர் டிவோஸ் அரச உத்தியோக ஜாதகங்களும் உண்டு.

077 844 8942


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1951 - 06 - 03

மறைவு 2022 - 07 - 03

எமது அன்பு நண்பர்களான சமூகசேவகர் **கந்தப்பிள்ளை திலீபன்** (லண்டன்), **கந்தப்பிள்ளை பிரதாபன்** (லண்டன்), **கந்தப்பிள்ளை ஜெனோபன்** ஆகியோரின் அன்புத் தாயார் அமரர் **க.இந்திராணி** அவர்களின் பாசமிகு சகோதரன்

### அமரர் சிவப்பிரகாசம் சிவசுப்பிரமணியம்

**(ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர் - இலங்கை வங்கி)**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் மனம் வருந்துவதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அனைவரின் துயரிலும் நாமும் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஊற்றங்கரை சித்தி விநாயகரை வேண்டுகின்றோம்.

**திரு.கா.சிவகுமார் குடும்பம்**
1ம் வட்டாரம், முள்ளியவளை வடக்கு,
முள்ளியவளை, முல்லைத்தீவு.

(12071)

# மரண அறிவித்தல்



123, பாண்டியன்தாழ்வு,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## நல்லதம்பி அகிலேஸ்வரன் (காந்தி)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வு கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி அகிலேஸ்வரன் (காந்தி) அவர்கள் நேற்று (04.07.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - நல்லதங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பராசக்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும் லோகேஸ்வரியின் பாசமிகு கணவரும் விஜிதா (விஜி - யாழ்ப்பாணம்), அமல்ராஜ், சர்மிலா (சூட்டி - வட்டக்கச்சி), ராகுலன் (றோஷான் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் - முல்லைத்தீவு), சௌத்திரி (பிரசன்னா - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) - வவுனியா), கஜேந்திரன் (சுமன் - லண்டன்) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் மகேந்திரம், பாலசிவராம் (ஆசிரியர் - கிளி.கலைவெட்டிதிடல் நாகேஸ்வரா வித்தியாலயம்), சுகிர்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி.கிழக்கு பிரதேச சபை), கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், வவுனியா), யசோதரை (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, கமலாம்பிகை, கனகாம்பிகை, சுந்தரலிங்கம், வேதாரணியம்பிள்ளை, யோகலட்சுமி, இராஜதுரை, ஏரம்பமூர்த்தி மற்றும் யோகாம்பிகை (அப்புத்தளை), தண்டாயுதபாணி (ஓய்வுபெற்ற கிராம அலுவலர் - வட்டக்கச்சி), தர்மபாலசிங்கம் (கிளிநொச்சி), தர்மாம்பிகை (லண்டன்), ஜெயலெட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மதுஷன், கிந்துஷன், டர்மிகா, யுகான், தஷாங்கிதா, அட்சயன், சார்விகன், சுருத்தியா, ஆருயன், ஆருகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.07.2022) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பி.ப 2 மணியளவில் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:* குடும்பத்தினர்
077 087 9488

(12070)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.